**செ.வெ.எண்.66** **நாள்: 25.09.2017**

<u>பத்திரிக்கை செய்தி</u>

தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள மாணவர்கள் தங்கள திறமைகளை வெளிக்காட்டவும், தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் நவீன தொழில்நுட்பம் சார்ந்த எண்ணங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் உருவாக்க ஒரு களத்தினை ஏற்படுத்தவும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட உள்ளது. இதன் முதற்கட்டமாக மாவட்ட அளவில் இத்திறனாய்வு போட்டிகள் நடத்தப்பட்டு அதில் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் படைப்பு மாநில அளவில் கலந்து கொள்வதற்கு மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்படும். இதனடிப்படையில் திருநெல்வேலி மாவட்டத்தில் **அக்டோபர்** மாதம் 10 ம் தேதி திறனாய்வு போட்டிகள் திருநெல்வேலி மண்டலத்தைச் சார்ந்த அண்ணா பல்கலைகழகத்தில் (Anna University Regional Campus) நடைபெற உள்ளது. இப்போட்டிகள் இயந்திரவியல்(Mechanical), மின்னியல் மற்றும் மின்னனுவியல் (Electrial and Electronics), மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (Electronics and Information Technology) ஆகிய இம்மூன்று துறைகளில் நடத்தப்பட உள்ளது. இப்போட்டிகளில் பங்கேற்போர் கீழ்காணும் வகையில் பங்கேற்கலாம்.

1. பொறியியல் கல்லூரிகள்/ பல்தொழிற்நுட்ப கல்லூரிகள்/ பல்கலைகழகங்கள்/ கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் படித்துக்கொண்டிருப்பவர்கள், பயின்று தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களாக பயிற்சி பெறுவோர்
2. தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் மற்றும் அமைப்புசாரா தொழில்களில் பணி அனுபவம் பெற்ற திறனுடையோர்.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெறுவோருக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேலும் இவர்கள் மாநில அளவில் வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகளில் கலந்து கொள்ள தகுதிவுடையவர் ஆவர். இப்போட்டிகளை பார்வையிட தமிழகத்திலுள்ள பெரிய தொழில் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்கள் வருகை தர உள்ளனர். எனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மாணவர்கள்/ தொழிற்சாலை பணியாளர்கள்/ தொழில்பழகுநர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளையும், திறனையும் வெளிப்படுத்துவதன் மூலம் நல்ல வேலைவாய்ப்பினை பெறலாம் என்பதால் இப்போட்டிகளில் அனைவரும் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பிக்க கடைசி தேதி 05.10.2017. தங்களின் விண்ணப்பங்களை www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு பேட்டை, திருநெல்வேலி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய துணை இயக்குநர்/முதல்வரை அணுகவும். என மாவட்ட **ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப. அவர்கள** தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**